**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**L.A.O.P.No.02/2022**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனியம்மாள் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : காளியப்பகவுண்டர் | கணவர் பெயர் | : ராமசாமி |
| கிராமம் | : மார்க்கம்பட்டி | வயது | : சுமார் 51 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.09.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1 மற்றும் 2 நில ஆர்ஜிதம் செய்த தரப்பினர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :

அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் எனது தாயார் சீரம்மாளுக்கு பாத்தியப்பட்ட நிலம் ஆகும். இவ்வழக்கில் நல்லம்மாள் எனது சகோதரி ஆவார். இடையகோட்டை கிராமத்தில் சர்வே எண்.311/1பி மாணாவாரி நிலத்தில் ஹெக்டர் 0.26.0 நிலமும், சர்வே எண்.311/2 என்ற மாணாவாரி நிலத்தில் ஹெக்டர் 0.05.0 இதில் பாதி பாகமும், சர்வே எண்.311/5எ என்ற புலத்தில் ஹெக்டர் 0.14.0 முழுமையாகவும், சர்வே எண்.311/7 என்ற புலத்தில் 0.46.5 ஹெக்டரில் 1/6 பாகமும் சர்வே எண்.311/8 பூமியில் ஹெக்டர் 0.11.5 இதில் பாதி நிலமும், சர்வே எண்.311/11எ என்ற புலத்தில் ஹெக்டர் 0.14.00 நிலமும், சர்வே எண்.311/13 என்ற புலத்தில் ஹெக்டர் 0.12.0 வில் 1/6 பாகமும், சர்வே எண்.311/14எ என்ற புலத்தில் ஹெக்டர் 0.55.0 நிலமும், மேற்படி நிலங்களில் சர்வே எண்.311/7ல் 5கூரை வீடும், ஓட்டு வீடு ஒன்றும், 22 தென்னை மரங்களும், மேற்படி நிலத்தில் உள்ள இரண்டு கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள எலெக்ட்ரிக் மோட்டாரும், ஆயில் இன்ஜின் ஒன்றும், அதில் பாத்தியப்பட்ட 1/6 பாகமும் சேர்த்து அரசால் நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றால் ? ஆமாம்.

மேற்படி நிலங்கள் நஞ்சை நிலமா அல்லது புஞ்சை நிலமா என்றால் ? நஞ்சை நிலமும் உள்ளது. புஞ்சை நிலமும் உள்ளது. மேற்படி நிலத்தில் தென்னை மரங்கள் 22 மரங்கள் இருந்ததாகசொல்லியுள்ள நிலையில் அதற்கான சாகுபடி அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பணப்பயிர்கள் விளைக்கூடிய பூமி என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. நில ஆர்ஜித அதிகாரி நில மதிப்பு செய்வதற்கு அருகாமை நிலத்திற்கான நில மதிப்பீட்டு சான்று நில ஆர்ஜித அதிகாரியிடம் கொடுத்துள்ளேனா என்றால் ? கொடுத்துள்ளேன். அந்த நில மதிப்பீட்டு சான்றை நான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவில்லை என்றால் ? ஆஜர்படுத்தவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நில ஆர்ஜித அதிகாரியால் பரிசீலிக்கப்படவில்லை என்று நான் சொல்லியுள்ள நிலையில் எதை வைத்து அவ்வாறு முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ? நாளது வரை எங்களது தரப்பில் நில ஆர்ஜித அதிகாரி நில ஆவணங்களை கேட்டு பரிசீலிக்கவில்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் செங்கல் சூளை வைத்து நடத்துவதற்கு உகந்த நிலம் என்று நான் சொல்லியுள்ள நிலையில் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கோ அல்லது அருகாமை நிலத்திற்கோ சாகுபடி அடங்கல் கணக்கினை இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். பழனி சார்பு நீதிமன்றத்தில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது சம்மந்தமான வழக்கில் பிறப்பிக்கபபட்ட உத்தரவின் பேரி பயனாளி ஒருவர் மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு பற்றி எனக்கு தெரியும் என்றால் ? தெரியும். அந்த உரிமை கோரிக்கையாளர் கருப்பணகவுண்டர் என்ன உறவு என்றால் ? எனக்கு பெரியப்பா என்ற உறவு ஆகிறது. காளியப்பகவுண்டர், கந்தசாமி, அழகியப்பகவுண்டர், காளிமுத்து, கந்தசாமிகவுண்டர், வேலுச்சாமி ஆகியோர்கள் எனக்கு உறவினர்கள். பங்காளி என்ற உறவு ஆகிறது. அவர்களது பூமி எனது

பூமிக்கு அருகாமையில் தான் உள்ளது. மேற்படி மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் மேல்முறையீட்டு வழக்கில் 17.07.2009ம் தேதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் விசாரணை நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட தெகையான, செண்ட் ஒன்றுக்கு ரூ.350 வீதம் ஊர்ஜிதம் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். அந்த தொகை வீதம் எனக்கு தொகை கிடைத்தால் போதுமானதா என்றால் ? ஆமாம். போதுமானது தான். இதை தவிர்த்து நான் கோரியுள்ள தொகை அதிகமானது என்றால் ? சரியல்ல. மனுச் சொத்தில் கிணறு இருந்தது என்றால் ? கிணறு உள்ளது. மின்மோட்டார், ஆயில் இன்ஜின் இருந்தது. வீடு இருந்ததா என்றால் ? வீடு இருநத்து. நான் கேட்டுள்ள கோருரிமை தொகையானது மிகைப்படுத்தி கேட்டுள்ளேன் என்றாலும், மனுச்சொத்தானது மாணாவாரி நிலமாக இருக்க கூடிய நிலையிலும், போதுமான விளைநிலமாக இல்லாத நிலையிலும் கேட்டுள்ள தொகை அதிகம் என்றால் ? சரியல்ல. நான் கேட்டுள்ள வட்டி விகிதம் அதிகம் என்றால் ? சரியல்ல. நான் கேட்டுள்ள கருணை தொகை அதிகம் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.09.02 18:15:47 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்